இருப்பினும், மனிதனுக்குள் எங்கோ ஓரிடத்தில்; அவன் மாத்திரம் அந்த சிறு... நான் உங்களுக்கு விவரித்துக் காண்பித்தபடி, அது ஒரு பொத்தான். ஒரு மனிதன் இரட்சிக்கப்படும் போது, அவனுடைய அவ்வளவு பாகம் தேவனாகின்றது. அந்த சிறு ஒளி உள்ளே வந்து, அவன் தவறு செய்வதை விட்டு விடும்படி செய்கிறது

# வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: **விளங்காத சத்தம்**

The Uncertain Sound

டிசம்பர் 18, 1960 பிரன்ஹாம் கூடாரம்

ஜெபர்ஸன்வில், இந்தியானா, அமெரிக்கா

**40.** நீங்கள் கடலின் ஆழத்தில் செல்லும் போது அங்குள்ள கடற் பூண்டைப்போல். அநேக முறை கடலின் ஆழத்தில் செல்ப வர்கள் இந்த கடற்பூண்டின் அடியில் சென்று தங்களை அறியா மலே அதில் சிக்கிக்கொண்டு அதிலிருந்து தங்களை விடுவித்துக்

கொள்ள முடியாமல் போய் விடுகிறது.

41. அப்படித்தான் பாவமும் மானிடவர்க்கத்தை சிக்கவைத்துள்ளது. அப்படித்தான் குளிர்ந்த நிலை சபைக்கு செய்துள்ளது. அப்படித்தான் கம்யூனிஸ்டுகள் நாட்டுக்கு செய்துள்ளனர். அது மிகவும் துரோகமான செயல்! அது நமது சரீரங்களைச் சுற்றிக் கொண்டு, இந்த தேவனுடைய ஒளியை வெளியே தள்ளுகிறது. ஸ்தாபனங்கள் விசுவாசத்தை மறுதலித்து, நமக்குள் இருந்த தேவனுடைய மகத்தான

வல்லமையாகிய விசுவாசத்தின் கதிர்கள் அனைத்தையும் வெளியே தள்ளி விட்டதன் விளைவாக நாம் இப்பொழுது ஒரு விடுதியை அடைந்துள்ளோம். சபையானது விடுதியை விட கீழ்த்தரமான நிலையில் உள்ளது. ஏனெனில் அது அந்தகாரத்துக்குள் தள்ளப்பட்டுள்ளது. அவர்கள் தேவனுடைய அற்புதங்கள் நடக்கும் என்பதை மறுதலித்து, ”அது நடக்காது” என்று கூறுகின்றனர்.

42. இருப்பினும், மனிதனுக்குள் எங்கோ ஓரிடத்தில்; அவன் மாத்திரம் அந்த சிறு... **நான்**

உங்களுக்கு விவரித்துக் காண்பித்தபடி, அது ஒரு பொத்தான். ஒரு மனிதன் இரட்சிக்கப்படும் போது, அவனுடைய அவ்வளவு பாகம் தேவனாகின்றது. அந்த சிறு ஒளி உள்ளே வந்து, அவன் தவறு செய்வதை விட்டு விடும்படி செய்கிறது. நீங்கள் குரோதம், பெருமை, சச்சரவு, அவிசுவாசம் இவையனைத்தையும் நீக்கிவிட முடியுமானால், அந்த சிறு பொத்தானைப் போன்ற தேவனுடைய வல்லமையின் ஒளி வளர்ந்து, வளர்ந்து, வளர்ந்துகொண்டே வந்து,

அவிசுவாசத்தை படிப்படியாக அகற்றும். நீங்கள் உங்கள் சரீர முயற்சியினால் இதை செய்ய முடியாது. நீங்கள் பரிசுத்தமாக்கப்பட்ட, பிரதிஷ்டை செய்யப்பட்ட ஜீவியத்தின் மூலம் இதை செய்கின்றீர்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியானவர் உங்கள் மூலம் அசைவாடுகின்றார். நான் அதை ஓரிடத்தில் அண்மையில் கிரகித்துக் கொண்டேன் ...

